புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுர் ஆண்டு 2056 • மே 22, 2025 • புரட்சி 25 • முழக்கம் 19 • விலை ரூ.6.00

# "ஆகமத்தீண்டாமையை" வலியுறுத்தும் உச்சநீதிமன்றத் தீர்ப்பு

உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக தலித் சமூகத்தைச் சார்ந்த கவாய் பதவி ஏற்ற அடுத்த நாளிலே உச்சநீதிமன்றம் ஆகம தீண்டாமையை நியாயப்படுத்தி இருக்கிறது.

ஆகமக் கோயில்களில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆக முடியாது என்ற இந்தத் தீர்ப்பை அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு வரவேற்று இருப்பது கண்டனத்திற்குரியது. திராவிட மாடல் ஆட்சியின் கொள்கைக்கு எதிரான இந்தத் தீர்ப்பை எப்படி வரவேற்கிறார்?

இந்த கோரிக்கையின் நோக்கம் அர்ச்சகர் பதவிகளுக்கானது அல்ல, மாறாக ஆகமக் கோயில்களில் சூத்திரர்கள் அர்ச்சர்களாகக் கூடாது என்ற இழிவுக்கு எதிரான போராட்டம்.

ஒருமுறை கலைஞர் சட்ட மன்றத்தில் "கர்ப்பகிரகத்துக்கு பாதுகாப்பு தேவை தான்,

ஆனால் அது வர்ணாசிரம பாதுகாப்பாக இருக்கக் கூடாது" என்று காங்கிரஸ் உறுப்பினர் கேள்விக்கு பதிலளித்தார் கலைஞர் கருத்துக்கு எதிராகவே அமைச்சர் பேசுகிறார்.

அரசியல் சட்டம் தலைமை நீதிபதியாக ஒரு தலித் வர முடியும் என்று கூறுகிறது. ஆனால் ஆகமங்களோ பிராமணர்களைத் தவிர பிற ஜாதியினர் கோவி லுக்குள் அர்ச்சகராக முடியாது என்று கூறுகிறது.

அரசியல் சட்டத்தையே ஆகமங்கள் கட்டுப்படுத்து கின்றனவா? என்ற கேள்விகள் எழுகின்றன.

ஆகமங்களுக்கு உட்பட்ட கோயில்களில் அனைத்து ஜாதி யினரும் அர்ச்சகராக முடியாது என்று அறிவித்த உச்சநீதிமன்றம் ஆகமங்கள் அல்லாத கோயில்களில் வேண்டுமானால் நியமித்துக் கொள்ளலாம் என்று பரிந்துரைத்துள்ளது.

தீண்டாமை சமூகத்தில் குற்றம் என்று கூறுகிற அரசியல் சட்டம் சமயங்களில் மட்டும் தீண்டாமை ஆகமங்கள் வழியில் நீடிக்கலாம் என்று கூறுவது நியாயம் தானா?

பெரியார் நெஞ்சில் தைத்த முள் மேலும் ஆழமாகப் புரையோடி விட்டது. 1971-ஆம் ஆண்டின் தொடங்கிய இந்தப் போராட்டம் இப்போது மீண்டும் பழைய நிலைக்கு திரும்பி விட்டது.

தமிழ்நாடு அரசு பிறப்பித்த அனைத்து ஜாதிகளும் அர்ச்சகர் ஆகும் ஆணை இப்போது சாகடிக்கப்பட்டு விட்டது. பார்ப்பனியத்தின் உயிர்நாடி எதில் தங்கி இருக்கிறது என்று பெரியார் கணித்தாரோ அது மிகச் சரியானது என்பதை இப்போது உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தி இருக்கிறது.

**"ஆகமங்கள் மாற்ற முடியாதா?"**

இப்போது கோயில்களின் கட்டமைப்பும் கோயில் வழிபாடுகளும் ஆகமங்களுக்கு முரண்களாகவே இருக்கின்றன என்று மகராசன் குழு அறிக்கை உட்பட பல்வேறு ஆய்வுகள் வெளிப்படுத்தி விட்டன.

ஆகம கோவில்களில் கண்காணிப்பு கேமரா, ஆன்லைன் பதிவு, குளிர்சாதன வசதி என்ற நவீன வசதிகள் ஆகம விதிகளுக்கு மாறாக பயன்பாட்டுக்கு வந்து விட்டன. ஆனால் அர்ச்சகர்கள் மட்டும் அவர்களாக மட்டுமே இருக்க வேண்டும் அதை மாற்ற முடியாது என்று கூறுகிறார்கள்.

தீண்டப்படாத மக்கள் கோயில் நுழைவுக்கு கூட ஆகமங்கள் அனுமதிக்கவில்லை அதையும் மீறித்தான் கோயில் நுழைவு சட்டம் வந்தது.'பாஞ்சராத்திரங்கள்' என்ற வைணவ ஆகமம் வழிபாடுகளில் ஜாதிய பாகுபாடுகளை தடுக்கிறது.

ஆனால்"பிராமணியத் தீண்டாமையை"வலியுறுத்தும் ஆகமங்களை மட்டுமே சரியானவை என்கிறார்கள் அக்ரஹாரங்களை தவிர பிற பகுதிகளில் அனைத்து ஜாதிகளும் குடி இருக்கலாம் என்பது போலவே இந்தத் தீர்ப்பு வந்திருக்கிறது. தமிழ்நாடு திராவிட மாடல் ஆட்சியின் அனைத்து ஜாதி அர்ச்சகர் சட்டத்தை உயிர்ப்பிக்க உரிய சட்ட நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும்.

## நாத்திகர் விழாவுக்கு சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி!

வரும் மே 24 அன்று திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சேலம் மாவட்டம் கொளத்தூரில் நடைபெற உள்ள நாத்திகர் விழா - மூட நம்பிக்கை ஒழிப்பு பேரணி - பொதுக்கூட்டம் ஆகியவற்றிற்கு அனுமதி அளிக்க காவல்துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கூட்டம் நடத்த அனுமதி கேட்டும் இதுவரை போலீசார் தரப்பில் எந்த உத்தரவும் தராததால் சேலம் மாவட்ட தி.வி.க. மகளிர் அணி அமைப்பாளர் சுதா அவர்கள் கூட்டத்திற்கு அனுமதிகோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் மீது நீதிமன்றம் உத்தரவு. வழக்குரைஞர் திருமூர்த்தி கழக சார்பில் வாதாடினார்.

## பெரியார் பல்கலை.பேராசிரியர் கதிரவனை பொறுப்பில் இருந்து நீக்குக!



தமிழக அரசுக்கு கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி கோரிக்கை! இது குறித்து கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை:

"ஆட்சிக் குழு உறுப்பினர் நிர்வாகப் பதவியில் பொறுப்பு வகிப்பதா? துணை வேந்தரின் செயலுக்குக் கண்டனம். ஆட்சிக் குழு பதவிக்கு அவமானத்தை ஏற்படுத்தி விட்டார் உளவியல் துறை பேராசிரியர் கதிரவன்"

ஆட்சிக் குழு உறுப்பினர் என்பது நிர்வாகம் எடுக்கும் முடிவுகளுக்கு ஒப்புதல் கொடுக்கும் ஒரு அமைப்பாகும். அவ்வாறான ஆட்சிக்குழுவில் உள்ளவரே கையெழுத்திட்டு பணி இடை நீக்க ஆணையைப் பேராசிரியர் வைத்தியனாதனுக்கு வழங்கி விட்டு இவரே எப்படி ஆட்சிக் குழுவில் ஒப்புதல் தர முடியும்? இந்த முறைகேட்டால் பேராசிரியர் கதிரவன் ஆட்சிக் குழு உறுப்பினர் என்ற தகுதியை இழந்து விட்டார். இவரை உடனடியாக ஆட்சிக் குழு உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க வேண்டும்.

மேலும் சேலம் பெரியார் பல்கலைக் கழக உதவிப் பேராசிரியர் வைத்தியநாதன் தமிழக அரசின் உயர் கல்வித்துறை செயலாளர் சுனில் பாலிவாலின் அரசாணையை மேற்கோளாகக் காட்டி "பதிவாளர் தேர்வினை நடத்த அரசு தடை விதிக்க வேண்டும்" என்று கடந்த பிப்ரவரியில் அரசுக்கு கடிதம் எழுதியதை பத்திரிகைகள் செய்தியாக வெளியிட்டுள்ளன.பேராசிரியர் வைத்தியநாதன் அவர்கள் ஊடகங்களுக்கு பேட்டியோ செய்தியோ கொடுக்காத நிலையில் அரசுக்குக் கடிதம் அனுப்பியதை வைத்து எப்படி பணியிடை நீக்கம் செய்ய முடியும்? துணை வேந்தரின் அனைத்து ஊழல்களையும் வெளிக்கொண்டு வந்த ஒரே காரணத்தை வைத்து பணி இடை நீக்கம் செய்ததை ஏற்க முடியாது. உயர் கல்வித்துறை கூடுதல் செயலாளர் பழனிச்சாமி விசாரணையில் முக்கிய சாட்சியாக இருந்தவர் வைத்தியநாதன். மேலும் ஊழலுக்கு எதிராக சூரமங்கலம் காவல் உதவி ஆணையர் விசாரணையிலும் இவர் ஒரு சாட்சியாக இருந்துள்ளார். உயர்நீதி மன்ற நீதியரசர் வேல்முருகன் தனது உத்திரவில் ஜெகன்னாதன் சாட்சிகளைக் கலைக்கவோ மிரட்டவோ கூடாது என்ற உத்திரவிற்கு எதிராக துணை வேந்தர் சாட்சிகளை மிரட்டி உள்ளார்.

தமிழக அரசு இதில் உடனடியாக தலையிட்டு மே19ஆம் நாள் பணி நிறைவு ஆக உள்ள துணை வேந்தரின் ஆணையின் அடிப்படையில் -செய்யப்பட்டுள்ள பேரா.வைத்தியநாதன் அவர்களின் இடை நீக்கத்தை -உடனடியாக ரத்து செய்ய வேண்டுமாறு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

**- "கொளத்தூர் மணி",**
**தலைவர்,**
**திராவிடர் விடுதலைக் கழகம்,**

## சென்னையில் சிறப்பாக நடந்த குழந்தைகள் பழகு முகாம்

தமிழ்நாடு அறிவியல் மன்றம் மற்றும் திராவிடர் விடுதலைக் கழகம் இணைந்து சென்னையில் 17.05.2025 அன்று 'திராவிட வாரிசுகள்' ஒரு நாள் குழந்தைகள் பழகு முகாமை நடத்தியது. இந்த பழகு முகாமில் குழந்தைகளுக்கு தலைமைப் பண்பு வளர்த்தல், பாலின சமத்துவம், கலைகள் கற்றல் இது போன்ற தலைப்பில் கலை வடிவத்திலும் விளையாட்டு, பாடல் மூலமாகவும் வகுப்புகள் மற்றும் செயல்முறை விளக்கங்கள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, முத்துராணி, விரட்டு கலைக்குழு ஆனந்த் ஆகியோர் பயிற்சி வழங்கினர். தோழர் சிற்பி ராஜனின் மந்திரமா? தந்திரமா? என்று அறிவியல் விளக்க நிகழ்ச்சியும் நடைபெற்றது.





கழகக் குடும்பங்களைச் சேர்ந்த முப்பதுக்கும் மேற்பட்ட குழந்தைகள் இந்த பழகு முகாமில் ஆர்வத்துடன் பங்கேற்றனர். கலந்துகொண்ட குழந்தைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. கழகத்தின் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், இளைஞரணி அமைப்பாளர் அருண், மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு மற்றும் பகுதி கழகத் தோழர்கள் நிகழ்வைப் பார்வையிட்டனர்.

## தலையங்கம்

# ஆளுநர் அத்துமீறல்களுக்கு துணைபோவதா?

இந்தியாவில் ஒற்றை மதவாத ஆட்சியைத் திணிக்கும் நோக்கத்தோடு செயல்படும் ஒன்றிய ஆட்சியின் அத்துமீறல்களுக்கு எதிராக திராவிட மாடல் ஆட்சி தான் கொள்கைப் போராட்டம் நடத்துகிறது.

தொகுதி மறுவரையறை திட்டத்தைப் பயன்படுத்தி தென் மாநிலங்களின் சட்டமன்ற, நாடாளுமன்ற எண்ணிக்கையைக் குறைக்கும் ஆபத்துக்களை முன்கூட்டியே கண்டறிந்து முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டினார் தமிழ்நாடு முதலமைச்சர்.

இப்போது மீண்டும் மாநில முதலமைச்சர்களுக்கு சட்டமன்றஉரிமையை மீட்கும் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.ஆளுநரின் அதிகாரப் பிடியில் இருந்து சட்டமன்ற உரிமையை மீட்டெடுக்கும் சட்டப் போராட்டத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

இந்த உரிமைகளை ஒழிப்பதற்கு குறுக்கு வழியில் குடியரசுத் தலைவருக்கான 143-ஆவது அதிகாரத்தைப் பயன்படுத்த முன் வந்திருக்கிறது ஒன்றிய ஆட்சி. இதில் ஒன்றிய ஆட்சிக்கு என்ன பாதிப்பு வந்துவிட்டது? ஏன் இதை குறுக்கு வழியில் சீர்குலைப்பதற்கு முயற்சிக்க வேண்டும்?

நாடாளுமன்றம் நிறைவேற்றுகிற மசோதாவுக்கு அடுத்த நாளே குடியரசுத் தலைவர் ஒப்புதல் கொடுத்து விடுகிறார். பாஜக ஆட்சி செய்யும் மாநில சட்டசபைகள் நிறைவேற்றும் தீர்மானத்திற்கு உடனே அம்மாநில ஆளுநர்கள் ஒப்புதலைத் தந்து விடுகிறார்கள்.

ஆனால் பாஜக அல்லாத மாநில ஆட்சிகள் நிறைவேற்றுகின்ற மசோதாவுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் தராமல் இழுத்தடிப்பு செய்கிறார்கள்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சி தனது கடமைகளைச் செய்ய முடியாமல் நியமிக்கப்படுகின்ற ஆளுநர்கள் சட்டமன்ற உரிமைகளை தங்கள் கையில் எடுத்துக் கொள்வது ஒரு ஜனநாயகத்திற்கோ அல்லது கூட்டாட்சித் தத்துவத்திற்கோ உகந்ததுதானா?

நீதிமன்றம் உயர்ந்ததா? சட்டமன்றம் உயர்ந்ததா? என்ற கேள்விக்கு உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி கவாய் ஒரு சரியான பதிலைக் கூறியிருக்கிறார். இரண்டையும் விட அரசியல் சட்டம் தான் உயர்ந்தது என்பது தான் அவரது பதில்.

அரசியல் சட்டம் வகுத்துள்ள கோட்பாடுகள் அதன் நோக்கங்கள் முறையாக பயன்படுத்தாதபோது நீதிமன்றங்கள் தலையிடுவதற்கு உரிமை உண்டு.

ஏற்கனவே தூக்கு தண்டனைக்கு எதிராக கருணை மனுக்கள் பல ஆண்டு காலம் குடியரசுத் தலைவர் மாளிகையில் கிடப்பில் போடப்பட்ட நிலையில் உச்ச நீதிமன்றம் தலையிட்டு அதை சரி செய்தது.

ஐந்து ஆண்டுகளுக்கு மேல் குடியரசுத் தலைவர் மாளிகையில் கருணை மனுகிடப்பில் இருந்தால் நீதிமன்றம் தலையிட்டு அதை முடிவுக்கு கொண்டு வரலாம் என்ற தீர்ப்புகள் வந்திருக்கின்றன.

உச்சநீதிமன்றம் ஆளுநருக்கும், குடியரசுத் தலைவருக்கும் விதித்துள்ள காலக்கெடுவுக்கு நீதிமன்றமே தனது தீர்ப்பில் தெளிவாக விளக்கி இருக்கிறது.

*2016 ஆம் ஆண்டு ஒன்றிய ஆட்சி பிப்ரவரி 4-ஆம் தேதி உள்துறை அமைச்சகம் வழியாக வெளியிட்ட அலுவலகக் குறிப்பில் " மாநில அரசுகளிடமிருந்து பெறப்பட்ட மசோதாக்கள் மீது மூன்று மாதத்துக்குள் கண்டிப்பாக முடிவெடுக்க வேண்டும்" என்று அறிவுறுத்தி உள்ளது.

*அதே தேதியில் மாநில அரசுகளுக்கும் அலுவலகக் குறிப்பு ஒன்றை அனுப்பி உள்ளது. அதிலும் மசோதாக்கள் நிறைவேற்றத்திற்கு மூன்று மாத காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டு இருந்தது.

*" மாநில அரசுகளின் நலனில் அக்கறை கொண்டு மாநில அரசின் சட்டங்கள் மீது காலக்கெடுவுடன் முடிவெடுக்க அரசு அக்கறை கொண்டிருக்கிறது" என்று அதில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் இதைச் சுட்டிக்காட்டி அதன் அடிப்படையிலேயே காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது என்பதை தெளிவாக விளக்கி இருக்கிறார்கள். இதே ஒன்றிய அரசு தான் இப்போது குடியரசுத் தலைவர் வழியாக காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டதை எதிர்த்து கேள்விகளைக் கேட்க வைத்திருப்பது பச்சை சந்தர்ப்பவாதம்.

பாஜக ஆட்சி செய்யாத மாநிலங்களில் ஆளுநர்கள் வழியாக பாஜகவே ஆட்சி செய்யத் துடிக்கிறது, என்பதுதான் குடியரசுத் தலைவர் வழியாக கேள்வி கேட்க வைத்திருக்கும் ஒன்றிய ஆட்சியின் நோக்கமாக இருக்கிறது. இதைவிட ஜனநாயகத்திற்கும் கூட்டாட்சித் தத்துவத்திற்கும் வேட்டு வைக்கின்ற ஆபத்து வேறு எதுவும் இருக்க முடியாது.

குடியரசுத் தலைவர் 143 வது விதி எழுப்பும் கேள்விகளுக்கு நீதிமன்றம் பதிலளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி கோபால கவுடா சென்னையில் நடந்த விழா ஒன்றில் கூறியிருக்கிறார். அயோத்தியில் ராம ஜென்ம பூமி வழக்கில் இதே போல் குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்றத்தின் அறிவுரையைக் கேட்டது, ஆனால் உச்ச நீதிமன்றம் அதற்குப் பதில் அளிக்கவில்லை.

அரசியல் நிர்ணய சபையில் 1949 ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் நாள் இது குறித்து விவாதம் நடந்தது எச் பி காமத் என்ற உறுப்பினர் இந்த பிரச்சனையை எழுப்பிய போது வரைவுக்குழுத் தலைவர் அம்பேத்கர் இதை தெளிவுபடுத்தினார். "143 ஆவது பிரிவு எங்கும் குடியரசுத் தலைவர் எழுப்பும் கேள்விகளுக்கு உச்சநீதிமன்றம் பதிலளிக்க வேண்டிய கட்டாயம் இல்லை (The supreme court is not bound)"

அரசியல் சட்டத்தின் நோக்கத்தை ஒன்றிய ஆட்சி சிதைக்கிறது மதவாதத்துக்கும் ஜனநாயகப் படுகொலைக்கும் முறைக்கேடாகப் பயன்படுத்தத் துடிக்கும் இவர்கள் தான் "தேசத்து துரோகிகள்."

# ஆணாதிக்கதிற்கு எதிரான தீர்ப்பு!

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கின் தீர்ப்பு வரவேற்கத்தக்க ஒன்றாகும். இந்தத் தீர்ப்பு அரசியல் பார்வையில் விமர்சிக்கப்படுகிறது, அதுவும் தேவைதான் அதைவிட சமூகப் பார்வையில் இந்தத் தீர்ப்பு மிகவும் முக்கியத்துவமானது.

ஒரு பெண்ணுக்கு உயிரை விட கற்பு பெரிது என்ற ஆணாதிக்க சமூகப் பார்வைக்கு மரண அடி தந்திருக்கிறது இந்த தீர்ப்பு. கற்பு பெண்களுக்கு மட்டுமே புனிதமாக்கப்பட்டது, உடல் ரீதியாக தாக்குதலுக்கு உள்ளாகும் பெண்கள் துணிவுடன் வெளியே வருகிறார்கள்.

ஆனால் பாலியல் வன்முறை வழியாக பாதிக்கப்படும் பெண்கள் துணிவோடு வெளியே வருவது இல்லை; சமூகம் தன்னை இழிவாகப் பேசும் என்று அஞ்சுகிறார்கள். கட்டாய பாலியல் வன்முறை கூட ஒரு வன்முறைதான் என்ற புரிதலுக்கு சமூகம் வராததும் இதற்கு ஒரு காரணம். இதன் காரணமாகவே பல பெண்கள் பாலியல் வன்முறையை வெளிப்படுத்த அஞ்சுகிறார்கள்.

இந்த அச்சத்தை பொள்ளாச்சி கும்பல் தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு வீடியோக்களைக் காட்டி மிரட்டி அவர்களைப் பணிய வைத்து இருக்கிறது. ஆனாலும் கூட பெண்கள் தாங்கள் பெற்ற கல்வி வலிமையினால் இந்த தடைகளை உடைத்தெறிய தயாராகி விட்டார்கள் என்பதால் தான் பாதிக்கப்பட்ட பெண்கள் காவல் நிலையத்திற்கு வந்திருக்கிறார்கள் இந்த துணிச்சலை பாராட்ட வேண்டும்; கற்பிழந்த பெண் உயிர் வாழவே கூடாது; அதற்குப் பிறகு அவளுக்கு வாழ்க்கையே இல்லை என்று நமது மதமும் பண்பாடும் மூளையில் திணித்து வைத்துள்ளன.

கணவர்களின் கற்புக்கு தமிழில் ஏன் வார்த்தை இல்லை என்று கேட்ட பெரியார் அடிமைக் கற்பும் நிர்ப்பந்தக் கற்பும் கொடுமையானது வெறுக்கத்தக்கது என்று தனது "பெண் ஏன் அடிமையானாள்"நூலில் அழுத்தமாக பதிவு செய்துள்ளார்:

பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பலியான ஆண்களின் மனைவிமார்கள் தங்கள் நெற்றிக் குங்குமத்தை இழந்து விட்டார்கள் என்று இந்த தாக்குதலுக்கு குங்குமத்தை குறியீடாக்கி சிந்தூர் என்று பெயர் சூட்டினார் மோடி.

தாக்குதலுக்கு மத வடிவம் தரும் முயற்சி குங்குமம், தாலி, மெட்டி இவைகளெல்லாம் பெண்களுக்கான குறியீடுகளாக புனிதமாக்கப்பட்டுள்ளன, ஆண்களுக்கு இத்தகைய குறியீடுகள் எதுவும் இல்லை.

இதே வழக்குக்கு மனுதர்மம் சட்டமாக இருந்த பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் என்ன தீர்ப்பு வந்திருக்கும்? உயிரைக் கொடுத்தாவது கற்பைக் காப்பாற்ற வேண்டிய பெண்கள் அதில் தவறி விட்டார்கள் எனவே பெண்களே குற்றவாளிகள் என்ற தீர்ப்புதான் வந்திருக்கும். இப்போது சட்டங்கள் மாறிவிட்டன ஆனால் ஆணாதிக்க சிந்தனை மட்டும் அப்படியே நீடிக்கிறது இந்த தீர்ப்புக்கு பிறகாவது பெண்கள் கற்பு என்ற புனித கோட்பாட்டை உடைத்து அதுவும் ஒரு வன்முறையே என்று வெளியே வர வேண்டும்.

**விடுதலை இராசேந்திரன்**
**முகநூல் பதிவு**
*14.05.25*

# மண் சோறு சாப்பிடுவோர் என் ரசிகர்கள் அல்ல - நடிகர் சூரி.



பிரசாந்த் பாண்டியராஜ் இயக்கத்தில் சூரி நடித்துள்ள திரைப்படம் ‘மாமன்’. மே 15-ஆம் தேதி வெளியான இத்திரைப்படம் வெற்றியடைய வேண்டுமென்று சூரியின் ரசிகர்கள் மதுரையில் மண் சோறு சாப்பிட்டு, அந்த வீடியோவைப் பகிர்ந்தனர். மண் சோறு உண்பது, நடிகர்களின் கட் அவுட்டிற்கு பாலாபிஷேகம், மொட்டை அடிப்பது. அலகுக் குத்துவது என விதவிதமான பிற்போக்குத்தனங்களை, பல்வேறு நடிகர்களுக்கு ரசிகர்கள் செய்வது தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், இத்தகைய பிற்போக்குத்தனங்களை இதுவரை எந்த நடிகரும் கண்டித்ததில்லை. அல்லது அவை, பிற்போக்குத்தனங்கள், இத்தகைய செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று வெளிப்படையாகக் கூறியதும் இல்லை.

ஆனால், முதன்முறையாக, தனது ரசிகர்களைக் கடுமையாக எச்சரித்து, முன்னுதாரணமாகியிருக்கிறார் நடிகர் சூரி. ’மாமன்" படம் வெற்றியடைய மண்சோறு சாப்பிட்டவர்களை ’தம்பிகள்* என்று சொல்வதற்கே எனக்கு வெட்கமாக இருக்கிறது. தம்பிகளா, இது ரொம்ப முட்டாள்தனமானது. படம் நன்றாக இருந்தால், கதை நன்றாக இருந்தால் படம் ஓடும். அதைவிட்டு, மண் சோறு சாப்பிட்டால், படம் எப்படி எடுத்தாலும் ஓடி விடுமா என்ன? மிகவும் வேதனையாக இருக்கிறது. அந்தப் பணத்தில் 4 பேருக்கு நீர், மோர், உணவு வாங்கிக் கொடுத்திருக்கலாம். இதுபோன்ற செயலைச் செய்பவர்கள் எனது ரசிகர்களாகக் கூட இருக்கத் தகுதியற்றவர்கள்" என வெளிப்படையாக தனது ரசிகர்களைக் கண்டித்து, இத்தகைய செயல்களில் ஈடுபட வேண்டாம். என்று அறிவுறுத்தியிருக்கிறார்.

சூரியின் ரசிகர்களுக்கு மட்டுமல்ல, இத்தகைய பிற்போக்குத்தனங்களில் ஈடுபடும் எல்லா ரசிகர்களுக்கும், இந்த அறிவுரை நிச்சயம் பொருந்தும். கண்மூடித்தனமாகத் தங்களைப் பின்பற்றும் ரசிகர்களுக்கு முன்னுதாரணமாக இருப்பதே நடிகர்களுக்கு அழகு. அதை நேர்த்தியாகச் செய்த நடிகர் சூரியின் செயல் பாராட்டுக்குரியது.

*(நன்றி முரசொலி)*

## மேட்டூர் மகளிர் நாத்திக விழா சிந்தனை:

# விடை தெரியாத குழப்பம் "கடவுள்"

**கொளத்தூரில் மே24 ஆன்று திராவிடர் விடுதலைக் கழகத்தின் மகளிர் அணி நாத்திகர் விழாவை நடத்துகிறது. உலகிலேயே நாத்திக பெண்கள் நடத்தும் விழா வேறு எங்கும் நடந்தாகக் குறிப்புகள் இல்லை. மாநாட்டுச் சிந்தனையாக பெரியார் கருத்துக்களின் தொகுப்பு...**

## 'கடவுள்' எதற்கு?

கடவுள் என்பது அர்த்தமும் குறிப்பும் அற்ற வார்த்தையாய் இருந்து வந்த போதிலும், அது, மனித சமூகத்தில் 100-க்கு 99 மக்களைப் பிடித்துத் தன்வயப்படுத்தி, மடமையாக்கி ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. கடவுள் என்ற வார்த்தை கற்பிக்கப்பட்டுப் பல ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஆகியிருந்த போதிலுங்கூட, 'கடவுள் என்பது இன்னது' என்று குறிப்பாக, குளறுபடி இல்லாமல்-தெளிவுபட உணர்த்தியவர்களோ, உணர்ந்தவர்களோ, இதுவரையில் காணக்கிடைக்கவில்லை. பொதுவாக, அந்தப்படி ஒரு உணர்ச்சியை மக்களுக்குள் எப்படியாவது புகுத்தி, அவர்களைப் பயப்படுத்தி வைக்க வேண்டும் என்கின்ற அவசியத்தியனால் அதற்கு என்று வேறொரு (மானச) உலகத்தையும், பாவ புண்ணியத்தின் பயனையும்,மோட்ச நரகத்தையும், கற்பித்து அதைப் பரப்பப் பலவித ஸ்தாபனங்களையும் உண்டாக்கி-அதன் பிரச்சாரத்தின் பேரால் பிழைக்க ஒரு கூட்டத்தையும் ஏற்பாடு செய்து, அக்கூட்டத்திற்கு அதிலேயே பிழைத்துத் தீர வேண்டிய தான நிலைமையையும் ஏற்படுத்திவிட்டதால் வெகு சுலபமாகவும் செல்வாக்காகவும், அதன் பிரச்சாரம் நடக்கவும் மக்களைத் தன்வயப்படுத்தவும் ஆன காரியங்கள் நடந்துகொண்டே வருகின்றன. 'கடவுள் என்றால் என்ன?' என்பதை உணருவதற்கில்லாமல் - உணர வேண்டும் என்று நினைப்பதற்கில்லாமலும் இருந்து வருகிறது.

*-குடிஅரசு 20.11.1932.*



## பாவச்சீட்டுகளின் கதை

மனிதன் செய்கிற பாவ புண்ணியம் என்பதைப் பற்றி சிந்தித்தால் யோக்கியதையும் வெளிப்படும். புண்ணியம் செய்தவன் தான் மோட்சமடைய முடியும். பாபம் செய்தவன் மோட்சமடைய முடியாது. ஆனால் பார்ப்பான் சொல்லுகிறபடி கேட்டால் மோட்சமடையலாம். எப்பேர்ப்பட்ட அயோக்கியத்தனம் செய்தாலும் பாதகமில்லை. பார்ப்பானுக்குத் தானதர்மம் செய்தால் அதுவே பெரிய புண்ணியம் என்று நம்பும்படி செய்து விட்டனர்.

இப்படி இம் மதத்தில் மட்டும் இல்லை, கிறிஸ்தவ மதத்திலும் இருந்திருக்கிறது. பாதிரிகள் கூறுகிறபடி கேட்டால் பாபம் மறைந்து போகுமாம். அதாவது பாவ மன்னிப்புச் சீட்டு வாங்குதல் என்ற முறை ஒன்று உண்டு. அதன்படி பாதிரியிடம் அதற்கான கட்டணத்தைச் செலுத்தி பாப மன்னிப்பு சீட்டு வாங்கினால் பாபம் போய் விட்டதாகப் பொருள் | இப்படியே பாதிரிகள் பாமர மக்களிடம் பொருளை வாங்கிக்கொண்டு, "நான் உங்கள் பாபத்தைப் போக்க மன்னிப்புச் சீட்டுக்கள் கொடுக்கிறேன்" என்று மக்களிடம் பணம் சுரண்டிக்கொண்டு வந்தான். இதனால் நாட்டில் நல்லவன் கூட அயோக்கியத்தனம் செய்துவிட்டு மன்னிப்புச் சீட்டு வாங்கினான். எந்தவிதமான அயோக்கியத்தனம் பொய்ப்புரட்டு, கொலை பாதகம் செய்துவிட்டும் கலபமாக மன்னிப்புச்சீட்டு வாங்குவதன் மூலம் அப்படிச் செய்த பித்தலாட்டங்களின் கொடுமையெல்லாம் மறைந்து போய்விடுகிறதாம்! இந்தத் துணிவின் பேரில் எவனும் சர்வசாதாரணமாகக் கெட்டுப் போக முடிகிறது.

இதைக் கண்ட ஒரு ஆராய்ச்சிக்காரன் அந்தப் பாதிரிக்குப் புத்தி கற்பிக்க முற்பட்டான். அவனும் இரண்டொரு நாள் பாபமன்னிப்புச் சீட்டு வாங்கி வந்தான். வழக்கம்போல் வாங்கி வந்து ஒரு நாள் பாதிரியிடம் "இதுவரை செய்த பாபத்துக்கு மட்டும்தான் மன்னிப்புச் சீட்டுக் கொடுப்பீர்களோ?" என்று கேட்டான். அதற்கு பாதிரி "செய்த பாபம், செய்கிற பாபம், செய்யப்போகிற பாபம் இப்படி முக்காலத்திலும் செய்யப்படும் பாபம், அனைத்துக்கும் மன்னிப்புச் சீட்டுக் கொடுப்போம். அதுவும் பாபத்தின் தரம் இவ்வளவு என்பது மட்டும் இல்லை. திருடினாலும், கொள்ளை யடித்தாலும், விபசாரம் செய்தாலும், கொலை செய்தாலும், இன்னும் எப்படிப்பட்ட பாதகத் தொழில் செய்தாலும், அவைகள் அத்தனைக்கும் மன்னிப்புச் சீட்டு உண்டு" என்றான். பாதிரிக்குக் காசு, அதற்காக இப்படிக் கூறிவிட்டான். "அப்படியானால் நான் ஒரு இடத்தில் கொள்ளையடிக்கத் திட்டமிட்டிருக்கிறேன். அப்படி கொள்ளையடிப்பதால் உண்டாகும் பாபத்திற்கு மன்னிப்புச் சீட்டு முன்பே கொடுக்க வேண்டுகிறேன்" என்று அவன் கேட்டான்.

பாதிரியும் சரியென்று அதற்கென்று கட்டணத் தொகையைக் கொஞ்சம் அதிகமாகவே வாங்கிக் கொண்டு மன்னிப்புச் சீட்டு கொடுத்துவிட்டான். மறுநாள் இரவு அந்த மன்னிப்புச் சீட்டுடன் பாதிரியின் வீட்டிலேயே புகுந்து கொள்ளையடிக்கச் சென்றான். பாதிரியைக் கட்டி இழுத்து உதைத்து நீ சேர்த்து வைத்த பொருளை எல்லாம் கொடு என்று கேட்டு துன்புறுத்தவும். அதற்குப் பாதிரி "அடபாவி! மாபாதகம் செய்கிறாய்; நீ செய்யும் தொழில் மிகப் பாபம் நிறைந்தது இதற்கு நரக வேதனைதான் அடையவேண்டும்' என்று ஏதேதோ தான் உதைப்பட்ட வேகத்தில் உளறிக் கொட்டினாள். ஆனால் கொள்ளையடிக்க வந்தவன் "பாதிரி சாமிகளே நான் இதற்கு முன்பே பாப மன்னிப்புச் சீட்டு வாங்கி வைத்திருக்கிறேன். இதோ பாரும்" என்று பாக்கெட்டில் இருந்த சீட்டை எடுத்துக் காட்டினான்.

உடனே பாதிரி "என்ன முட்டாள்தனமான காரியத்தைச் சிறிதும் யோசிக்காமல் செய்து விட்டோமே. நம்முடைய பித்தலாட்ட மூட்டையை அவிழ்த்துக் கொட்டி விட்டானே! இச்செய்தி எங்கிலும் பரவினால் நம் கதி என்ன ஆகும்" என்று பயந்து அந்தக் கொள்ளைக்காரனிடம் "நீ இரவில் கொள்ளையடிக்க வந்தாய், நான் பகலில் கொள்ளையடிக்கிறேன் இதுதான் வித்தியாசம்" என்று கூறி, "நாம் இருவரும் நண்பர் களாக வேண்டும். இனி நான் இத்தொழிலை விட்டுவிடுகிறேன். என்னை மன்னித்துக் கொள்" என்று வேண்டினானாம். படிமை

அப்படிப் பாதிரிகளின் பித்தலாட்டம் வெளுத்தது. அது முதல் அப்படிப்பட்ட பாபமன்னிப்புச் சீட்டைக் கொண்டே கிறிஸ்தவ மதத்தில் சீர்திருத்தம் செய்யப் பட்டது. ஒரு சிலர் திருந்தினார்கள். மற்றவர்கள் இன்னமும் முட்டாள்களாக இருக் கின்றனர். அதைப் போன்றுதான் இந்து மதத்தின் பாபம் செய்த மனிதனை மேல் உலகில் தண்டிக்கிறார்கள்.

உலகிலேயுள்ள கோடானுகோடி யானை முதல் கிருமி ஈறாக உள்ள ஜீவராசிகளில் மனிதனைத் தவிர, அதுவும் மனிதரிலும் பல பேர்களைத் தவிர, மற்ற எந்த ஜீவராசிக்கும், கோடிக்கணக்கான மனித ஜீவனுக்கும் கடவுள் நம்பிக்கை என்பது அறவேயில்லை. மனிதரிலும், உலகில் பகுதிப்பட்ட மனிதருக்கும் கடவுள் நம்பிக்கை புகுத்தப்படுகிறது, கற்பிக்கப்படுகிறது என்றுதான் சொல்லவேண்டும்.

ஏனெனில், கடவுள் நம்பிக்கை உள்ள மக்கள் எல்லோருமே ஒரே மாதிரியான கடவுளிடம் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லர். எப்படியெனில், கடவுள் நம்பிக்கைக்காரர்கள் ஒரே மாதிரியான, ஒரே பெயருள்ள, ஒரே மாதிரியான எண்ணிக்கை கொண்ட, ஒரே மாதிரி குணங்கொண்ட கடவுள் நம்பிக்கைக்காரர்களும் அல்லர்; ஒரே மாதிரியான கடவுள் தன்மை, ஒரே மாதிரியான கடவுள் சக்தி, ஒரே மாதிரியான கடவுள் செயல் என்ற நம்பிக்கை கொண்டவர்களுமல்லர்.

இதற்குக் காரணமென்ன? கடவுள் நம்பிக்கையும், அதன்மேல் சொல்லப்பட்ட பலவாறான தன்மைகளும் மனிதனுக்கு இயற்கையாய்த் தானாகத் தோன்றாமல், மற்றவர்கள் கற்பிப்பதாலும், கற்பிக்க நேருவதாலும், சூழ்நிலையாலும், தான் அனுசரிக்கும் - தான் கட்டுப்பட்ட மதத்தாலும் மத ஆதாரங்களாலும், மதக் கற்பனை, மதக் கட்டுப்பாடு என்பவை களாலுமே ஏற்படுவதால்- இவை பற்றிய விஷயங்களில் ஒன்றுபோல் நம்பிக்கை கொள்ள முடிவதில்லை.

***-கடவுள் ஒரு கற்பனையே நூலிலிருந்து-1971.***

## நாத்திகம் என்றால் நடுங்குவது ஏன்?

எவ்வளவுக்கெவ்வளவு கடவுள் கருத்து ஆழமாகப் பதிகிறதோ -உடைத்தானவனாய் இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் ஆயுள் பரியந்தம் துக்கமும் கவலையும் கொண்டவனாகத் தான் இருப்பான்; பேராசைக்காரனாகத்தான் இருப்பான். பொதுவாகவே இன்று பார்ப்போமேயானால், கடவுள் பக்தன், கடவுளை வணங்குகிறவன்- அவன் முட்டாளானாலும், அறிவாளியானாலும் எதற்காக வணங்குகிறான்? என்ன எண்ணத்தில் வணங்குகிறான்? ஏதோ ஒரு வேண்டுகோளின் மீது தானே - எதையோ எதிர்பார்த்து, ஆசைப்பட்டுத் தானே வணங்குகிறான்?

'எனக்கு ஒன்றுமே வேண்டாம்' என்று சொல்பவனாய் இருந்தாலும், 'உன் பாதாரவிந்தம் வேண்டும்' என்றாவது சொல்லித்தானே கும்பிடுவான்? இவன் யாருக்குச் சமம் என்றால், 'எனக்குப் பின்புறம் -பிடரியில் ஒரு கண் இருக்க வேண்டும்' என்று கடவுளை வணங்குகிறவனுக்குச் சமமானவன்தானே!

ஏதாவது ஒன்றை வேண்டித்தானே பக்தி, வணக்கம், பூசை, தொழுகை பிரார்த்தனை முதலியவை எல்லாம்? ஒன்றும் வேண்டாதவனுக்குக் கடவுளிடம் என்ன வேலை?

அதிலும் தவறு செய்தவன்,மோசடி செய்தவன், செய்கிறவன், பேராசைக்காரன் ஆகியவர்களுக்குத்தான்-கடவுள் பக்தி, பூசை முதலியவை அதிகமாக இருப்பதைக் காண்கிறோம்.

இலஞ்சம் வாங்கும் சைவன், இலஞ்சம் வாங்கும் வைணவன், இலஞ்சம் வாங்கும் முஸ்லிம், இலஞ்சம் வாங்கும் கிறிஸ்தவன் முதலிய இவர்கள் - பெரிதும் பூசை, வணக்கம், தொழுகை, பிரார்த்தனை இவைகளில் மிகக் கண்டிப்பாக தவறாமல் நடந்து கொள்கிறார்கள்.

***கடவுள் ஒரு கற்பனையே நூலிலிருந்து-1971.***

ஒருவன் உண்மையாகவே மதம் இல்லாமல் இருப்பது நாஸ்திகம் என்று கருதிக் கொண்டு ஏதாவது ஒரு மதத்தின் பேரால் உயிர்வாழ வேண்டியவனாய் இருக்கிறான்; ஆதலால், எப்படியாவது தான் நாஸ்திகன் என்று சொல்லப்படாமல் இருக்க வேண்டும்; மற்றபடி மதக்கொள்கைகள் எவை, எப்படி இருந்தாலும் தான் இலட்சியம் செய்வதில்லை என்கின்ற கருத்தின்மீதே தனக்குள் எவ்விதக் கொள்கையும் இல்லாமல், ஒரு மதத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு, ஏதோ ஒரு மதவேஷத்தைப் போட்டுக் கொண்டு இருக்க வேண்டியவனாக இருக்கிறான்.

***பகுத்தறிவு மார்ச்-1936.***

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# செக்கடிக்குப்பம்-ஓர் பெரியார் மண்!

தமிழ்நாட்டில் பெரியார் கொள்கைகளை முழுமையாக ஏற்ற கிராமங்கள் பற்றிய தொடர் ஒன்று **முரசொலி** நாளேட்டில் வாரந்தோறும் வெளிவருகிறது. அந்தத் தொடரை **பெரியார் முழக்கம்** நன்றியுடன் பதிவு செய்கிறது.

அம்மி மிதித்து அருந்ததி பார்த்து, பார்ப்பனர்களை வைத்து, சடங்குகள் செய்து நடைபெற்றால்தான் அது திருமணம் என்று இன்றும் கருதுவோர் பலர் இருக்க, 1925-ஆம் ஆண்டில் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிய பெரியார், சுயமரியாதைத் திருமண முறையை, தமிழர்களுக்குத் தந்தார்.

இந்தத் திருமண முறையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம்மதம் இருந்தால் போதும், பார்ப்பனர்களை அழைக்கத் தேவையில்லை, சடங்குகள் தேவையில்லை, தாலியும் கட்டாயமில்லை. மாலைமாற்றிக் கொண்டு, உறுதிமொழி எடுத்துக்கொண்டால் போதுமானது. பெரியார் அறிமுகப்படுத்திய இந்த எளிமையான திருமணமுறைக்கு, 1967-இல் அண்ணாவின் ஆட்சி அமையும் வரை சட்டப்பூர்வ அங்கீகாரம் கிடைக்கவில்லை. ஆனாலும், பல ஆயிரக்கணக்கானோர் சுயமரியாதைத் திருமணம் புரிந்தனர்.

அண்ணா இயற்றிய சட்டத்தால் இத்தகைய சுயமரியாதைத் திருமணங்கள் சர்வ சாதாரணமாகிவிட்ட போதிலும், வைதீகத் திருமணங்களே இப்போதும் அதிகம். ஆனால், தமிழ்நாட்டுக்கே முன்னுதாரணமாக ஒரு கிராமம், 100% சுயமரியாதைத் திருமணங்களை மட்டுமே நடத்திக் கொண்டிருக்கிறது என்றால் நம்ப முடியுமா? விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டத்தில் உள்ள கோட்டப்பூண்டி ஊராட்சிக்கு உட்பட்ட ஒரு சிறிய கிராமம் செக்கடிக்குப்பம். இதுவரை இந்த கிராமத்தில் ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமான சுயமரியாதைத் திருமணங்கள் நடைபெற்றுள்ளன.

## மாற்றத்திற்கான விதை!

1968-ஆம் ஆண்டு மலையனூர் பகுதியில் பெரியார் பங்கேற்ற பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு செக்கடிக்குப்பம் பகுதியில் இருந்தும் சிலர் சென்றுள்ளனர். அங்கு பெரியார் பேசிய பேச்சின் தாக்கமே செக்கடிக்குப்பத்தில் நடந்திருக்கும் மாற்றத்திற்குக் காரணம்.

பெரியார் தொண்டரான அர்ஜுனன் அதே ஆண்டு முதன்முதலில் சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்டார். அந்த ஊர் மக்களுக்கும் சுயமரியாதைத் திருமணத்தின் நோக்கத்தையும், எளிமையையும் உணர்த்தினார். பின்னர் அதுவே அந்த ஊரின் வழக்கமானது. வரதட்சணை என்ற பேச்சுக்கே அங்கு இடமில்லை. அங்கு நடைபெற்ற அனைத்து சுயமரியாதைத் திருமணங்களும் பதிவு செய்யப்பட்டு, அர்ஜுனன் இல்லத்தில் ஆவணங்களாகச் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

சுயமரியாதை இயக்கத்தின் தாக்கத்தால் கல்வி மீதான பற்று இவர்களிடம் அதிகமாகக் காணப்படுகிறது. கடன் சுமை இல்லாத எளிய முறையிலான சுயமரியாதைத் திருமணம், மது அருந்தாமை, குழந்தைகளின் கல்வியின் மீது காட்டும் ஆர்வம் ஆகியவை செக்கடிக்குப்பம் ஆண்களைத் திருமணம் செய்துகொள்ளும் பெண்களையும் வெகுவாக ஈர்க்கின்றன. அதனால், அவ்வூர் பெண்களும் சுயமரியாதைத் திருமண முறையைப் பெரிதும் வரவேற்கின்றனர்.

அதேபோல செக் கடிக்குப்பத்தைப் பொறுத்தவரை ‘திருவிழா’ என்றால் ‘பொங்கல்’ மட்டும்தான். கடந்த சில ஆண்டுகளாக ‘அசுர மன்னர்(இராவண) விழா’ கொண்டாடப்படுகிறது. இதைத்தவிர்த்து, மற்ற மத விழாக்கள் கொண்டாடப்படுவதில்லை. அர்ஜுனன் குடும்பத்தின் சார்பில், அவ்வூரில் தந்தை பெரியார் ஈ.வெ.ரா பள்ளி நடத்தப்படுகிறது. அவ்வூரின் திருமண முறையில் மட்டுமல்ல, அழைக்கும் பெயர்களில் கூட சமஸ்கிருத வாடை வீசுவதில்லை. ஊரில் திரும்பிய பக்கமெல்லாம் தமிழ்த்தென்றல், விடுதலை விரும்பி, மதியழகன், செந்தமிழ்க் கனி என அழகிய தமிழ்ப் பெயர்களே ஒலிக்கின்றன. ஒட்டுமொத்தத்தில் ஒரு தனிநபரின் முயற்சியால் ஒரு கிராமமே ‘பெரியார் மண்’ ஆனது.

**-பிரகாசு**

# நிமிர்வோம் வாசகர் வட்டம் எடுத்த திருவாரூர் தங்கராசு நூற்றாண்டு

நிமிர்வோம் வாசகர் வட்டத்தின் 27-வது சந்திப்பு 09.05.2025 அன்று திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை அலுவலகத்தில், தென்சென்னை மாவட்ட தலைவர் வேழவேந்தன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் தொடக்கமாக, மறைந்த திராவிட இயக்க இளம் எழுத்தாளர் சு.விஜயபாஸ்கரின் உருவப் படத்தை, கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் திறந்துவைத்தார்.

கழக வெளியீடுகளான "பெரியாரின் மானுடம்", "பெரியார் மீதான அவதூறுகளுக்கு மறுப்பு" ஆகிய நூல்கள் குறித்து தி.வி.க. தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி.எட்வின் பிரபாகரன் திறனாய்வு செய்தார். "அம்பேத்கர் நம் தலைவர்", "இறுதிமூச்சு அடங்கும் வரை யாருக்காக உழைத்தார் பெரியார்?" ஆகிய நூல்களை, தாம்பரம் நகரக் கழக அமைப்பாளர் அருண் கோமதி திறனாய்வு செய்தார்.

அதன்பிறகு, மறைந்த எழுத்தாளர் சு.விஜயபாஸ்கரை நினைவுகூரும்விதமாக, கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார் கனடாவில் இருந்து காணொளி வாயிலாக உரையாற்றினார். கழகத்துடனான விஜயபாஸ்கரின் தொடர்பு, ஜாதி ஒழிப்புக் களங்களில் ஆற்றிய பணிகள் குறித்து பல்வேறு செய்திகளை தோழர் விஜயகுமார் பகிர்ந்துகொண்டார்.



இறுதியாக, நூற்றாண்டு காணும் திராவிட இயக்க மூத்த முன்னோடி திருவாரூர் தங்கராசு அவர்கள் பற்றி கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் அவர்கள், "திராவிட இயக்க மாவீரர் திருவாரூர் தங்கராசு" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். பெரியார் காலந்தொட்டு, பெரியார் திராவிடர் கழகக் காலம் வரை திருவாரூர் தங்கராசு ஆற்றிய பணிகள், அவரின் எழுச்சிமிக்க உரைகள், தனித்துவமான கொள்கைப் பண்புகள் குறித்து இன்றைய இளம் தலைமுறைக்கு தெரியாத பல தகவல்களைப் பகிர்ந்துகொண்டார்.

இறுதியாக நிமிர்வோம் வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளர் பிரசாந்த் நன்றி கூறினார். நிகழ்வை, நிமிர்வோம் வாசகர் வட்ட அமைப்பாளர் பிரகாசு தொகுத்து வழங்கினார்.

நிகழ்ச்சியில் தோழர் ஹானஸ்ட் தன்னை கழகத்தில் இணைத்துக்கொண்டார். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் அவருக்கு கழக வெளியீடுகள் வழங்கி வரவேற்றார்.

# கழகத் தலைவருக்கு கடவுச்சீட்டு புதுப்பிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு!

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களுக்கு புதிய கடவுச்சீட்டு வழங்க வேண்டும். நிலுவையில் உள்ள வழக்குகளைக் காரணம்காட்டி கடவுச்சீட்டு கோரிக்கையை நிராகரிக்கக் கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி,சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், “என்னுடைய கடவுச்சீட்டு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் காலாவதியாகி விட்டதால், அதை புதுப்பிக்க வேண்டும். ஆனால், என் விண்ணப்பத்தை பரிசீலித்த மண்டல கடவுச்சீட்டு அதிகாரி, என் மீது தடா உள்ளிட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளதாகக் கூறி நிராகரித்துவிட்டார்” என முறையிட்டார். இந்த வழக்கு நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி முன்பு விசாரணைக்கு வந்தது.

கொளத்தூர் மணி தரப்பில் வழக்குரைஞர் வி.இளங்கோவன் ஆஜராகி, “குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாலேயே கடவுச்சீட்டை புதுப்பிக்காமல் இருப்பது தவறு என்று உச்சநீதிமன்றமும், சென்னை உயர்நீதிமன்றமும், ஏற்கெனவே பல வழக்குகளில் தீர்ப்புகளைப் பிறப்பித்துள்ளன” என்று வாதிட்டார். ஒன்றிய அரசுத் தரப்பில், மனுதாரர் கொளத்தூர் மணி மீது தஞ்சாவூர், சேலம் ஆகிய நீதிமன்றங்களில் 4 வழக்குகள் நிலுவையில் உள்ளன’ என்று வாதிடப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட உயர்நீதிமன்ற நீதிபதி, ‘உயர்நீதிமன்ற மதுரைக் கிளை அமர்வு தீர்ப்பின்படி, குற்றவழக்குகள் நிலுவையில் இருப்பதாகக் கூறி கடவுச்சீட்டை புதுப்பிக்க மறுக்க முடியாது. 8 வாரத்துக்குள் மனுதாரரின் கடவுச்சீட்டை புதுப்பித்து வழங்கவேண்டும். வெளிநாடுகள் செல்லும் பட்சத்தில் உரிய நீதிமன்றத்தில் அனுமதியை பெற்றுக்கொள்ளலாம்” என்று உத்தரவிட்டார்.

# மாணவர்களுக்கு ஆலோசனை மய்யம்,மாணவர் கழகம் முடிவு

சென்னை மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழகத்தின் (04/05/25) சந்திப்பு நடைபெற்றது. கூட்டத்திற்கு குறளரசி தலைமை தாங்கினார், இளவரசன் முன்னிலை வகித்தார். சூர்யா, ஷர்மிளா, தோழி, பிரசாந்த், பேரன்பு ஆகியோர் கலந்துகொண்டனர்.

எடுக்கப்பட்ட முடிவுகள்:

1)கல்லூரி சேர இருக்கும் மாணவ மாணவியருக்கான வழிகாட்டுதல் தருவது.

2)இட ஒதுக்கீடு பற்றிய அறிமுக வகுப்பு இந்த மாதத்தில் நடத்துவது.

3) புதிய இசைக்குழுவை தொடங்குவது.

தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பாக 2025-2026 ஆண்டு பள்ளி, கல்லூரிகளில் மாணவர்களின் எதிர்கால நலன் கருதி அவர்களுக்கான ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

தனியார் பள்ளிகளில் 25% பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு RTE முலமும், சென்னை பல்கலைக்கழகத்தின் இலவச கல்வித் திட்டத்தில் விண்ணப்பித்து தரப்படும்.

தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் கல்லூரி சேரும் மாணவ மாணவியருக்கான ஆலோசனை மையம். தொடர்புக்கு:

பேரன்பு(சென்னை): 89731-19313, இளவரசன்(சென்னை): 88382-77257
நாகராஜன்(சேலம்): 90929-04626, ஷர்மிளா(ஈரோடு)-75987-04581
நவீன்(கோவை)-63698-18361, ஷியாம் (தஞ்சாவூர்)-90808-18987

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : May 22, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran